# ஆயிரம் பெரியார்கள் வந்தாலும் உங்களை ....





**கானா பிரபா**
*(மடத்துவாசல் பிள்ளையாரடியில்)*

எண்பதுகளில் ஒரு சனிக்கிழமை நாள்.

‘பூபாலசிங்கம் மாமா வீட்டார் அம்மன் கோயிலடியில் மடை வச்சிருக்கினமாம், போட்டு வெள்ளன வா’ அம்மா காலையிலேயே விண்ணப்பம் வைத்தார்.

கொடியில் காயப் போட்ட காற்சட்டையை மாற்றிவிட்டு தோதாக சேர்ட் ஒண்டையும் மேலே போட்டு, ஒரு காலால் மோட்டச்சைக்கிளை உதைத்து இயக்கும் பாவனை கொடுத்து வாயில் சவுண்ட் விட்டுக் கொண்டே ஓடுகிறேன் சிவகாமி அம்மன் கோயிலடிக்கு. வழமையா கோயில் திருவிழாக் காலத்தில் தானே இவையின்ர பூசை வாறது, இண்டைக்கென்ன புதுசா மடை என்று மேலே கேள்வி ஓடிக் கொண்டிருக்க கால்கள் அம்மன் கோயிலடியை எட்டுகிறது.

அம்மன் கோயிலடிக்கு பின்புறம் இருக்கும் வைரவரடியில் தான் மாமி ஆட்கள் நிக்கினம். நேரே அங்கே ஓடிப் போய் மோட்டாச் சைக்கிளை நிப்பாட்டுமாற் போல நிக்கிறன். வைரவர் கோயிலின் சுற்றிலே ஒரு பிரகார தெய்வத்துக்கு முன்னால் மடை இருக்குது. என்னது மடை எண்டு பேந்தப் பேந்த முழிக்காதேங்கோ, சாமிக்குப் படைக்கும் படையலை மடை எண்டும் சொல்லுவினம்.

**சுவாமிக்கும் மச்சம் ஆராவது படைப்பினமோ? கண்ணப்பன் எண்ட வேடுவன் படைச்ச கதை கேள்விப்பட்டிருக்கிறன் ஆனா நாங்கள் ஒரு வீட்டில செத்தவீடு நடந்தாலோ, பெண்டுகள் பெரிய பிள்ளை ஆனாலோ கூட கோயில் வாசற்படியை மிதிக்க விடமாட்டோம்**

இதென்ன கொடுமையடா சுவாமிக்குப் படைச்சிருக்கிற சாமானைப் பாருங்கோ, சக்கரைப் பொங்கல், வடை, முறுக்குக்குப் பதிலா கோழி இறைச்சி சட்டியிலும், ஆட்டுக்கறி இன்னொரு சருவச்சட்டியிலும் இருக் குது, இது போதாதெண்டு மீன் பொரியல் கூட. நடுவில வாழையிலையில் குத்தரிசி அப்பாவியாகக் குவிக்கப்பட்டிருக்குது.

கோயிலடிக்கு வழக்கமா வாற ஐயர் வரேல்ல, வேறு ஒரு ஐயர் வந்து தான் மந்திரம் சொல்லி கற்பூரதீபத்தை சுவாமி க்கும் காட்டி, சுத்தவர இருந்த மச்சச் சாப்பாடுகளுக்கும் காட்டினார்.

சுவாமிக்கும் மச்சம் (அசைவம்) ஆராவது படைப் பினமோ? கண்ணப்பன் எண்ட வேடுவன் படைச்ச கதை கேள்விப்பட்டிருக்கிறன் ஆனா நாங்கள் ஒரு வீட்டில செத்தவீடு நடந்தாலோ, பெண்டுகள் பெரிய பிள்ளை ஆனாலோ கூட கோயில் வாசற்படியை மிதிக்க விடமாட்டோம் முப்பது நாளைக்கு, தெரியாமல் முட்டை போட்டுச் செஞ்ச பிஸ்கட்டைச் சாப்பிட்டாலே கோயில் படி ஏற விட மாட்டா எங்கட அம்மா. இதென்னப்பா ஒரே மாமிசப் படையலா இருக்கு என்று எனக்குள் முளைத்த கேள்விகளுக்கு அப்போது பதில் சொல்ல யாரும் இல்லை. அதுதான் நான் முதலும் கடைசியுமாகப் பார்த்த வேள்வி.

யாழ்ப்பாணத்தில் இருந்தபோது போர்ச் சூழல் ஓரளவு சமூக மாற்றத்தையும் ஏற்படுத்தி விட்டது. தனியே இனவிடுதலை என்றில்லாமல் சமூக பொருளாதார விடுதலையாக அது மாறி இருபது வருஷத்துக்கு மேலாக நின்று நிலைத்ததைக் கண்ணால் கண்டிருக்கிறேன்.

**சாவகச்சேரியிலும், வவுனியாவிலும், மன்னாரிலும் ஐடிபி தடுப்பு முகாம்களில் அடைபட்டிருக்கும் லட்சக்கணக்கான எம் உறவுகள் தான் இந்தப் பலியாடுகளின் உருவில் தெரிகின்றார்கள்**

செத்த ஓணானைப் போட்டுக் கசிப்புக் காய்ச்சுவதில் இருந்து, வேள்வி என்று சொல்லப்படும் உயிர்களைப் பலியெடுத்தலும் ஓய்ந்து போனதென்று தான் நினைத்திருந்தேன்.

ஆனால் ‘அண்ணன் எப்போ சாவான் திண்ணை எப்போ காலியாகும்’ என்று காத்திருந்த தம்பிகள் ஆரம்பித்து விட்டார்கள் தங்கள் பிற்போக்குத் தனத்தை.

அண்மையில் யாழ்ப்பாணம் கீரிமலைக்குப் போகும் வழியில் இருக்கும் காட்டு வைரவர் கோயிலான கவுனாவத்தை வைரவர் கோயிலில் அமர்க்களமாக நடந்தேறியிருக்கிறது ஆடுகளைக் கூட்டி வந்து உயிரோடு பலியெடுக்கும் நிகழ்வு.

சாதியம் சொல்லி கோயில் கிணற்றிலேயே தண்ணி அள்ள விடாமல் தடுக்கும் சமூகம், ஆராவது கோயில் படி மிதிச்சால் காலை முறிச்சுப் போடுவோம் என்று ஒரு பகுதி மக்களை தீட்டு என்று ஒதுக்கி வைத்த சமூகம், மூட நம்பிக்கையிலும் தாம் சளைத்தவர்கள் இல்லை என்று மீண்டும் நிரூபித்திருக்கின்றார்கள். இனி மெல்ல மெல்ல எல்லாம் விட்டதில் இருந்து தொடங்கும். சாதீயத்திமிரும், பிற்போக்குத் தனமும் கொண்ட எம் சமூகத்துக்குப் படிப்பினைகள் போதாது போல.

சைவபோசணியாக இருப்பதோ, அல்லது அசைவ போசணியாக இருப்பதோ அவரவர் உரிமை, அதைத் தடுக்க யாருக்கும் உரிமை இல்லை. ஆனால் இதெல்லாம் தெய்வத்துக்குச் செய்யும் காரியங்கள், இதை எதிர்த்தால் சாமி கண்ணைக் குத்திப் போடும் என்றெல்லாம் வற ட்டு சாக்குகளைச் சொல்லும் சமூகமும் இருக்கத் தான் செய்கின்றது.

சாவகச்சேரியிலும், வவுனியாவிலும், மன்னாரிலும் ஐடிபி தடுப்பு முகாம்களில் அடைபட்டிருக்கும் லட்சக்கணக்கான எம் உறவுகள் தான் இந்தப் பலியாடுகளின் உருவில் தெரிகின்றார்கள். இப்படியான பிற்போக்குத் தனமான சமூகத்துக்கா இத்தனை ஆயிரம் இளைஞர்கள் தம்மைக் காவு கொடுத்து விடுதலை பெறத் தம்மை மாய்த்தார்கள்?

முருகனுக்கு ரெண்டு வைப் என்று சொல்லி இரண்டு தேடுபவர்களுக்கும், கண்ணனுக்கு நிறைய என்று நிறைய தேடுபவர்களுக்கும், கண்ணப்பனும் மாமிசம் தானே படைத்தான் என்பவர்களுக்கும் செய்யும் பாவங்களுக்கு நிறைய ஜாமீன்கள் இருக்கின்றன.

என்னவோ போங்கள் ஆயிரம் பெரியார் வந்தாலும் உங்களைத் திருத்த முடியாதுடா.

